# பரலோகத்தில் நிச்சயிக்கப்பட்ட ஜோடி



ஆல்பர்ட் மற்றும் லிகியா

ஜுலை 18 , வாரம் 3



## ஸ்பெயின்



- ✓ இந்த வாரத்தின் ஊழியச்சம்பவத்தை ஓர் ஆணும் ஒரு பெண்ணும் பகிர்ந்து கொள்ளும்படி ஓய்வுநாள் பள்ளி கண்காணிப்பாளர் கேட்டுக்கொள்ள வேண்டும். அவர்கள் 40 வயதான ஆல்பர்ட் மற்றும் 39 வயதான லிகியா ஆகியோரின் அனுபவங்களை மாறி மாறி சொல்லவேண்டும்.
- ✓ **லிகியா:** நான் வெனிசுலாவில் ஒரு செவந்த்-டே அட்வென்டிஸ்ட் குடும்பத்தில் பிறந்தேன், தேவனை பற்றிய போதனைகளும் அனுபவங்களும் எனக்கு புதிதல்ல. ஆனால் என்னுடைய 22 வது வயதில் நான் நான் திருச்சபையை விட்டு வெளியேறி, கலைத்துறையிலும் ஃபேஷன் துறையிலும் ஈடுபாடு கொண்டேன். பல வருடங்களாக, ‘மிஸ் வெனிசுலா’, ‘மிஸ் ஹவாயன் டிராபிக்’ மற்றும் ‘மிஸ் ஹிஸ்பானோ’ போன்ற அழகுப்போட்டிகளில் மாடலிங் செய்தேன். நான் தொலைக்காட்சி, திரைப்படங்கள் மற்றும் நாடகங்களில் பணியாற்றினேன். பத்திரிக்கைகள் மற்றும் ஃபேஷன் பட்டியல்களில் தோன்றினேன். சொந்தமாக பல தொழில்களை நடத்தினேன். வெளிப்பார்வைக்கு என் வாழ்க்கை மிகச் சரியாகத் தெரிந்தாலும், உள்ளுக்குள் நான் ஒரு வெறுமையை உணர்ந்தேன்.



- ✓ **ஆல்பர்ட்:** நான் ஸ்பெயினின் பார்சிலோனாவில் இருந்து சுமார் 75 மைல் (120 கி.மீ) தொலைவில் உள்ள ஒரு சிறிய நகரில் வளர்ந்தேன். என் குடும்பத்தினரும் குறிப்பிட்ட ஒரு மதப்பின்னணியைச் சேர்ந்தவர்கள்தாம், ஆனால் அன்றாட வாழ்க்கையில் விசுவாசம் ஒரு முக்கியப் பகுதியாக இல்லை, அதனால், ஒரு நாத்திகச் சூழலிலேயே வளர்ந்தேன். வாழ்க்கை, மரணம்குறித்து எனக்குள் எப்போதும் ஆழமான கேள்விகள் இருந்தன. பல்வேறு உலக மதங்களில் அதற்கான பதில்களைத் தேடினேன், ஆனால் அதற்கான பதில்கள் வேதாகமத்தில் இருக்கும் என்று நான் ஒருபோதும் கற்பனை செய்யவில்லை.
- ✓ எனக்குக் கட்டிடக்கலை, கலாச்சாரம், பயணம், உலகத்தைச் சுற்றி வருவது மற்றும் வரலாறு ஆகியவை மிகவும் பிடிக்கும். ஆனால் என் வாழ்க்கை கேளிக்கை விருந்துகளாலும், மனநிறைவைக் கொடுக்காத அர்த்தமற்ற உறவுகளாலும் நிறைந்திருந்தது.
- ✓ **லிகியா:** நானும் உலகைச் சுற்றிப் பயணம் செய்தேன். நான் தேவனை விட்டு வெகுதூரம் விலகி இருந்தபோதிலும், என் இதயத்தின் ஆழத்தில், இந்த கலைத்துறை உலகம் எனக்குச் சொந்தமானதல்ல என்பதை உணர்ந்தேன். தேவன் என்னைப் பாதுகாத்து வருவதை அறிந்திருந்தேன்,



✓ **லிகியா:** ஆனால் அவரிடம் மீண்டும் செல்வது சாத்தியமற்றது என்று நினைத்தேன். என் வார இறுதி நாட்கள் நிகழ்வுகளால் நிரம்பிக்கிடந்தன, என் வாழ்க்கை முறை தேவன் விரும்பியதிலிருந்து முற்றிலும் தூரமாக இருந்தது.

மிகவும் வேதனை அளித்த ஓர் உறவு உட்பட, பல தோல்வியுற்ற உறவுகளுக்குப் பிறகு, நான் தீவிரமான ஒரு முடிவை எடுத்தேன். என் கலைத்துறை வாழ்க்கையை விட்டு வெளியேறினேன். என் தொழில்கள் உட்பட அனைத்தையும் அப்படியே கைவிட்டேன். என் அடையாளம் கலைத்துறையோடு பிணைக்கப்பட்டிருந்தது, இப்போது நான் யார் என்றே எனக்குத் தெரியவில்லை. அந்த நேரத்தில் நான் ஸ்பெயினில் வசித்து வந்தேன். மிகவும் வருத்தமடைந்து, சுயமுன்னேற்றப் புத்தகங்களில் பதில்களைத் தேடத் தொடங்கினேன். அப்போது, எனது வருங்காலக் கணவருக்கு இருக்கவேண்டிய, நான் எந்தக் காலத்திலும் சமரசம் செய்துகொள்ள முடியாத தகுதிகளின் பட்டியல் ஒன்றை உருவாக்கினேன். அந்தப் பட்டியலின் முதல் தகுதி, அவர் தேவன்மீது நம்பிக்கை உள்ளவராக இருக்கவேண்டும் என்பதாகும்.



- **ஆல்பர்ட்:** பல வருடங்களாகப் கேளிக்கை கொண்டாட்டங்களில் ஈடுபட்டு, தவறான இடங்களில் பதில்களைத் தேடிய பிறகு, என் வாழ்க்கை மிக மோசமான நிலையை எட்டியது. என் வாழ்க்கைக்கு ஒரு புதிய அர்த்தம் தேவை என்று உணர்ந்தேன். மிகுந்த சோகத்தில் மூழ்கினேன். என் இதயம் ஒரு புதிய மாற்றத்திற்குத் தயாராக இருந்தது. அந்த நேரத்தில்தான் எங்கள் பாதைகள் ஒன்றையொன்று சந்தித்தன.
- நாங்கள் சந்தித்தபோது, எங்களுக்குள் உடனடி இணக்கம் ஏற்பட்டது. எங்கள் உரையாடல்கள் இயல்பாகவே விசுவாசத்தைச் சுற்றியே இருந்தன; அது எங்கள் இருவருக்குமே ஆச்சரியமாக இருந்தது.
- **லிகியா:** எங்களின் இரண்டாவது சந்திப்பின்போது, ஸ்பெயினில் உள்ள ஒரு பிரபலமான செவந்த்-டே அட்வென்டிஸ்ட் பாடகருடைய பாடலை அவருடன் பகிர்ந்துகொண்டேன். இதற்கு முன்பு யாருடனும் அவ்வாறு நான் பகிர்ந்ததில்லை. ஆல்பர்ட் அதைக் கேட்டு முதலில் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தார், ஆனால் அதைப்பற்றி அவர் எதுவும் சொல்லவில்லை. மேலும் மேலும் அதிகமாகப் பேச ஆரம்பித்தோம். ஆல்பர்ட் தேவனைப்பற்றி அறிந்துகொள்ள ஆரம்பித்தார், நான் பாரம்பரியமாக அல்லாமல் அனுபவபூர்வமாக தேவனை மறுபடியும் கண்டுகொள்ளத் தொடங்கினேன்.



- ✓ **ஆல்பர்ட்:** தேவன் எவ்வாறு எங்களை அந்த நிலைக்கு வழிநடத்தினார் என்பதைப் புரிந்துகொள்ள முயன்று, இரவுகளை அழுதும், பேசியும், சிரித்தும் கழித்தோம். லிகியாவிற்கு இது தன் சொந்த வீட்டிற்குத் திரும்புவதுபோல் இருந்தது. ஆனால் எனக்கு, நான் சாத்தியமில்லை என்று நினைத்த ஒரு புதிய யதார்த்தத்தின் தொடக்கமாக இருந்தது. வேதாகமத்தின் தேவனைக் கண்டறிவது பைத்தியக்காரத்தனம்போல் தோன்றியது. ஆனால், நான் கண்டடைந்ததிலேயே அதுதான் மிக அழகான உண்மை என்று நிரூபணமானது.
- ✓ **லிகியா:** எங்களுடைய உறவு எங்கள் இருவருக்குளுக்குள்ளும் இடையே உள்ள ஒன்று மட்டுமல்ல என்பதை உணர்ந்தோம். அது ஆல்பர்ட், நான் மற்றும் தேவன் ஆகிய மூன்று தரப்பினருக்கு இடையிலானது. ஆரம்பத்திலிருந்தே, தேவன் மையப்புள்ளியாக இருந்து, எங்களின் ஒவ்வொரு அடியையும் வழிநடத்தினார். அவர் எங்களுக்கு என்று ஒரு நோக்கத்தை வைத்திருந்தார் என்பதை நாங்கள் உணர்ந்தபோது, நிச்சயதார்த்தம் செய்ய முடிவுசெய்தோம்.
- ✓ **ஆல்பர்ட்:** ஞானஸ்நானம் எடுத்தோம், பிறகு திருமணம் செய்துகொண்டோம். அதுவரை நாங்கள் அனுபவித்த அனைத்தும் தற்செயலாக நடந்தவை அல்ல என்பதை உணர்ந்தோம்.



- ✓ **ஆல்பர்ட்:** எங்கள் கடந்த காலத்தின் ஒவ்வொரு விஷயமும் எங்களுக்குள் ஒரு வெறுமையை விட்டுச் சென்றிருந்தது, ஆனால் இப்போது தேவன் எங்களை தமது அன்பினால் நிரப்பிக்கொண்டிருந்தார். உலகப் புகழ், கேளிக்கைகள் மற்றும் மேலோட்டமான உறவுகளால் ஒருபோதும் அந்த வெற்றிடத்தை நிரப்பமுடியாது என்பதையும், அதை அவரால் மட்டுமே நிரப்பமுடியும் என்பதையும் எங்களுக்குக் காண்பித்தார்.
- ✓ **லிகியா:** போலித்தனங்கள் அதிகமுள்ள ஓர் உலகத்திலிருந்து தேவன் எங்களை மீட்டார். இப்போது, நாங்கள் எங்கள் வாழ்க்கையை அவருக்காக அர்ப்பணித்துள்ளோம்; நாங்கள் தேவனிடம் கண்டடைந்த மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அதே அற்புத அன்பை மற்றவர்களும் கண்டடைய உதவுகிறோம்.
- ✓ **ஆல்பர்ட்:** இன்று, தேவன் எங்களுக்கு முன்னாலே சென்று எங்களை வழிநடத்துகிறார் என்கிற விசுவாசத்துடன் ஒன்றாகப் பயணிக்கிறோம். எங்களைப் போலவே வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடிக்கொண்டிருக்கும் மக்களுடன் இந்தச் செய்தியைப் பகிர விரும்புகிறோம்.